981 மார்ச் 25]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: : தலைவரவர்களே, இன்று அவை கூடிய நேரத்தில் நானும் உரிய நேரத்தில் வராத காரணத்தால் முதலில் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(அ) இத் திட்டம் தலைமைப் பொறியாள(ஆய்வு)ரின் மறு ஆய்வில் உள்ளது.

(ஆ) விரிவான ஆய்வு முடிந்து தலைமைப் பொறியாளரின் அறிக்கை கிடைத்த பின் அரசு முடிவெடுக்கும்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அணைக்கட்டினால் பயன்பெறக் கூடிய நிலங்கள் எத்தனை ஏக்கர், அதற்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம் தென்காசிப் பகுதியில் அடவினாயனார் கோயில் அருகில் ஹனுமாநதியின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்காக, ரூ. 149 இலட்சத்தில் ஒரு மதிப்பீடு 1972-ல் தயாரிக்கப்பட்டது. ஆனால் 1974—75-ல் விலைப் பட்டியல் உயர்ந்து விட்ட காரணத்தால் திட்டத்தின் மதிப்பீடு 211.50 இலட்சமாக உயர்ந்தது. அதற்குப் பிறகு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் ஏறபடக் கூடிய பயன் சரியாக இருக்குமா என்ற சந்தேகம் வந்ததற்குப் பிறகு கரிசல்குளம் அணைக்கட்டுப் பகுதிக்கு மேலே உள்ள இடத்தில் மறு ஆய்வு நடத்தி வருவதாகவும் அதன் மூலம் 3,952 ஏக்கர் நிலங்களின் பாசன வசதி உறுதி பெறுவதுடன், 1,120 ஏக்கர் நிலங்களின் பாசனப் பற்றாக் குறையைப் போக்கலாம் எனவும் தலைமைப் பொறியாளர் கூறியுள்ளார். ஆகவே இந்தத் திட்டம் இப்போது மறு ஆய்வில் இருக்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அமராவதி ஆற்றின் குறுக்கே அணை.

*வினா எண். 413.—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் கரூர் தொகுதியில் சணப்பிரட்டி-கோயம்பள்ளி கிராமங்களுக்கிடையே அமராவதி ஆற்றில் அணைக்கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே.இராஜாமுகமது : (அ) திட்டம் ஆரம்ப ஆய்வு நிலையில் உள்ளது.

(ஆ) மற்றும் (இ) திட்டம், ஆரம்ப ஆய்வு நிலையில் உள்ளதால் இவ்வினாக்களுக்கு இடமில்லை.

பாசனத்திற்காக பஞ்சப்பள்ளி அணையிலிருந்து தண்ணீர் விடும் திட்டம்

*வினா எண் 414— திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தர்மபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளி அணையிலிருந்து இராமக்காள் ஏரி வரை நீர்ப்பாசனத்திற்காக நீர்விடும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) எப்போது விடப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) : தர்மபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளி அணையிலிருந்து தர்மபுரி அருகில் உள்ள இராமக்காள் ஏரிக்கு 1979 ஆம் ஆண்டிலேயே ஜெர்தலாவ் ஏரி வழியாக வெட்டப் பட்ட வாய்க்கால் மூலம் தண்ணீர் விடப்பட்டது. சென்ற ஆண்டில் போதிய நீர்வரத்து இல்லாமையால் அணையிலிருந்து தண்ணீர் விடப்படவில்லை.

திரு. எஸ். அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரிக்கு அருகிலே இருக்கின்ற இராமக்காள் ஏரி நகராட்சிக்கு உள்ளடங்கிய பகுதியாக இருக்கின்றது. போதிய தண்ணீர் இல்லாததால் தண்ணீர் விடப்படவில்லை என்று அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். ஆனால் நகராட்சிக்கு உள்ளடங்கிய பகுதியாக இந்த ஏரி இருப்பதால் இதற்குத் தண்ணீர் விடப்பட்டால் அந்த நகரத்தின் குடிநீர் பிரச்சினை தீருவதோடு கிணறுகளிலும் நீர் அதிகமாகும். விவசாயத்திற்கும் உதவியாக இருக்கும். பஞ்சம் தீரும் ஆகவே இதற்கு முன்னுரிமை கொடுத்து ஆவன செய்ய அரசு முன்வருமா ?

(முற்பகல் 10–20)

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தர்மபுரிக்கு அருகே இருக்கக்கூடிய இராமக்காள் ஏரிக்கு 1979ஆம் ஆண்டிலே, ஜெர்தலாவ் ஏரி மேல் வெட்டப் பெற்ற வாய்க்கால் மூலம் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. நீர் வரத்து குறைவாக இருக்கிற காரணத்தால்